---

**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் - 2014**

---

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அத்தியாயம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

---

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

---

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | | இச்சொத்துக்கள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பாவனைக்காக 17 வருடங்களுக்கு முன் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் பதிவேடொன்றோ அல்லது பௌதீக ரீதியில் காணப்படுகின்றமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,272 | (i) | பல்வேறு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 287,378 தொகையான முற்பணம் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டதுடன் அதனை அறவிடவேண்டிய தரப்பினரின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (ii) | ஒரே முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்ட இறப்பர் மீன் பயிரிடும் |

---

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நிதியத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 210,010 தொகையினை அறவிட்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (iii) | பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 137,884 தொகையான மீதி உள்ளபடியாகக் கிடைக்கவேண்டியதாகக் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கான எதுவித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | (i) | கடப்பாடு ஏற்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்படாத ரூபா 222,031 தொகையான செலுத்தவேண்டிய முற்பணம் 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதியாகக் காணப்பட்டதுடன் அதனை செலுத்தவேண்டிய தரப்பினரின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (ii) | 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 5,448 தொகையான பொது வைப்புக்களுக்குரிய எவ்வித பதிவேடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | | (iii) | தபால் திணைக்களத்துடன் தகவல்களை பரிமாறிக்கொள்வதன் |

---

மூலம் இலகுவாக தீர்க்க முடியுமாக இருந்த அட்டுறு முத்திரை மற்றும் மின் சமிக்ஞை கட்டணங்கள் ரூபா 10,689 தொகை 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iv) கிடைக்கவேண்டிய தரப்பினர் தொடர்பான தகவல்கள் எதுவுமின்றி 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள அட்டுறு செலவினம் ரூபா 1,616 தொகையை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்திற்குரிய நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்களுக்காக வட்டி வருமானம் கிடைத்திருந்ததுடன் அது நிதியத்தின் ஒரே வருமான மூலமாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,961,943 தொகைக்குரிய 02 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 3,599,113 தொகையான சேமிப்பு வைப்புக்கள் மீளப் பெறப்பட்டு ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையால் தொடர்ந்தும் நிதியத்தின் செயற்பாடுகள் செயற்பாடின்றிக் காணப்பட்டது. அதன் படி மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கும் காசுப்பாய்ச்சல் கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

---

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்கால நிலைமை

தற்போது செயற்பாட்டில் இல்லாத இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் 06 மாத காலத்தில் கலைத்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததாக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2014 யூலை 04 ஆந் திகதிய ஆர்டீடீ/02/10/கலைத்தல்(நெ.வ) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி மீதியைத் தீர்ப்பனவு செய்யும் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நிதியத்திற்குச் சொந்தமாக இருந்த சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் மீதி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றுதல் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் எஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்